**மே – 22**

# TNPSC துளிகள்

- ஆன்லைன் மருந்தக நிறுவனமான (Online pharmacy) நெட்மெட்ஸ் (Netmeds) நிறுவனம் கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனியை தன்னுடைய விளம்பரத் தூதராக நியமித்துள்ளது.
- சூரியஒளி ஆற்றலின் மூலம் முழுமையாக இயங்கும் இந்தியாவின் முதல் இரயில்வே நிலையமாக கவுகாத்தி ரயில் நிலையம் உருவாகியுள்ளது. எரிபொருள் மீதான செலவைக் குறைப்பதும், கார்பன் அடிச்சுவட்டினைக் (carbon-footprint) குறைப்பதும் இந்த சோலார் ஆற்றலூட்டப்பட்ட இரயில் நிலையத்தின் நோக்கங்களாகும்.

# தேசியச் செய்திகள்

## தூய்மைக் கணக்கெடுப்பு

- அரசினுடைய அண்மைய தூய்மைமிகு இடங்களுக்கான (cleanliness survey) கணக்கெடுப்பில், இந்தூர் நகரமானது நாட்டின் தூய்மையான நகரமாக (cleanest city) உருவாகியுள்ளது. இந்தூரைத் தொடர்ந்து இக்கணக்கெடுப்பில் போபால் மற்றும் சண்டிகர் ஆகிய நகரங்கள் உள்ளன.




- சுவச் சர்வேக்ஷான் 2018 (Swachh Survekshan 2018) எனும் பெயருடைய அரசின் இந்த தூய்மைக் கணக்கெடுப்பின் நோக்கம், நாட்டில் உள்ள நகரங்கள் முழுவதும் நிலவுகின்ற தூய்மையினுடைய அளவினை மதிப்பிடுவதாகும்.
- இந்த கணக்கெடுப்பில் தூய்மைக்காகச் சிறந்த முறையில் செயலாற்றும் மாநிலமாக (best performing state) ஜார்க்கண்ட் மாநிலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜார்க்கண்ட் மாநிலத்தைத் தொடர்ந்த இடங்களில் மகாராஷ்டிரா மற்றும் சத்திஸ்கர் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- கடந்த ஆண்டிற்கான சுவச் சர்வேக்ஷான் பட்டியலிலும் இந்தூர் நகரமே முதலிடத்தைப் பிடித்தது. கடந்த ஆண்டு இக்கணக்கெடுப்பானது 430 இந்திய நகரங்களில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இம்முறை சுமார் 4200 நகரங்களில் இக்கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மாண்புடைய நீதிபதி

- இந்தியாவின் முன்னாள் அட்டர்னி ஜெனரலான (Attorney General of India) முகுல் ரோஹத்கீ (Mukul Rohatgi) பிரதமர் தலைமையிலான உயர்மட்ட லோக்பால் தேர்ந்தெடுப்புக் குழுவில் (high-profile Lokpal selection committee) மாண்புடைய நீதிபதியாக (Eminent jurist) நியமிக்கப்பட்டுள்ளார்.




- இந்த உயர் மட்டக் குழுவானது ஊழலுக்கு எதிர்ப்புத் தீர்ப்பாயராக (anti-corruption ombudsman) நியமிக்கப்பட வேண்டியோர்களுக்கான நபர்களின் பெயர்களை பட்டியலிடும்.
- சட்டவிதிமுறைகளின்படி, லோக்பாக் அமைப்பிற்கான நியமன செயல்முறைகளில் லோக்பால் உயர்மட்ட தேர்ந்தெடுப்புக் குழுவில் ஒரு பகுதியான மாண்புடைய நீதிபதி இடத்தை நிரப்புவது மிகவும் முக்கியமான செயலாகும்.
- இந்த உயர் மட்ட லோக்பால் தேர்ந்தெடுப்புக் குழுவில் இந்தியப் பிரதமர், இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, மக்களவை சபாநாயகர், மக்களவையின் பெரிய எதிர்க்கட்சியினுடைய தலைவர் (leader of the largest opposition party of Lokshaba) மற்றும் மாண்புடைய நீதிபதி ஆகியோர் இருப்பர்.
- 2013-ஆம் ஆண்டின் லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் (Lokpal and Lokayukta Act of 2013) 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போதிலும் 16-வது மக்களவையில் பெரிய எதிர்க்கட்சி ஒன்றின் தலைவர் இல்லாத காரணத்தால் இத்தனை ஆண்டுகள் இச்சட்டம் அமல்படுத்தப்படாமல் உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## மிகவும் அதிகமான மக்கட் தொகையுடைய நகரம்

- ஐநா அமைப்பினுடைய புதிய மதிப்பீட்டின் படி, 2028-ஆம் ஆண்டு வாக்கில் உலகில்

மிகவும் அதிகமான மக்கட்தொகையைக் (Most populous city) கொண்ட நகரமாக டெல்லி காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- ஐநா அமைப்பின் பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்களுக்கான துறையினுடைய (UN Department of Economic and Social Affairs-UN DESA) மக்கட் தொகை பிரிவு (Population Division) உலக நகரமயமாதலின் வாய்ப்புகள் (World Urbanisation Prospects) எனும் அறிக்கையின் 2018-ஆம் ஆண்டிற்கான திருத்திய பதிவை வெளியிட்டுள்ளது.
- இதன்படி, 2050 - ஆம் ஆண்டில் உலகினுடைய நகர்ப்புறங்களில் உலக மக்கட்தொகையில் 68 சதவீதத்தினர் வசிப்பர் என கணக்கிடப்பட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டு மற்றும் 2050 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் உலகினுடைய நகர்ப்புற மக்கட்தொகையில் 35 சதவீத வளர்ச்சியானது இந்தியா, சீனா மற்றும் நைஜீரியாவில் உருவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.
- 2050-ஆம் ஆண்டில் இந்தியாவில் கூடுதலாக 416 மில்லியன் நகர்ப்புறவாசிகள் இருப்பர். சீனாவில் கூடுதலாக 255 மில்லியன் நகர்ப்புறவாசிகள் இருப்பர் எனவும் நைஜீரியாவில் 189 மில்லியன் நகர்ப்புறவாசிகள் இருப்பர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, டோக்கியோ நகரமானது 39 மில்லியன் நகர்ப்புறவாசிகளைக் கொண்ட உலகின் மிகப்பெரிய நகரமாகும். அதைத் தொடர்ந்த இடத்தில் 29 மில்லியன் நகர்ப்புறவாசிகளோடு புதுடெல்லியும், 26 மில்லியன் நகர்ப்புறவாசிகளோடு ஷாங்காய் நகரமும் உள்ளது.

## சொங்குயிங் லியாங்ஜியாங் ஸ்டார்

- சீனா தனியார் நிறுவனத்தினால் தயார் செய்யப்பட்ட தனது முதல் இராக்கெட்டை வடமேற்கு சீனாவில் உள்ள ஏவுதளத்திலிருந்து ஏவியுள்ளது.



- தனியார் நிறுவனத்தினால் தயார் செய்யப்பட்ட இந்த இராக்கெட்டின் பெயர் சொங்குயிங் லியாங்ஜியாங் ஸ்டார் என்பதாகும்.

- இந்த இராக்கெட்டானது பெய்ஜிங்கில் அமைந்துள்ள ஒன் ஸ்பேஸ் டெக்னாலஜி (One Space Technology) எனும் தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- இந்தத் தனியார் நிறுவனத்தின் இராக்கெட் ஏவுதலானது அரசு அல்லாத நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ஓர் சீன இராக்கெட் வெற்றிகரமாக விண்ணின் சுற்றுவட்டப்பாதையில் முதல்முறையாக வெற்றிகரமாக நுழைந்துள்ளதைக் குறிக்கின்றது.
- திட எரிபொருள் என்ஜினால் (solid fuel engine) ஆற்றலூட்டப்பட்ட இந்த இராக்கெட்டானது OS-XO என்றும் அழைக்கப்படுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## உத்தரகாண்ட் முதல் நகர எரிவாயு விநியோகிப்பு அமைப்பு

- உத்தரகாண்ட் மாநிலத்தின் உதம்சிங்நகர் மாவட்டத்தில் உள்ள ருத்ராபூரில் உத்தரகாண்ட் மாநில முதல்வர் திரிவேந்திர சிங் ராவத் உத்தரகாண்ட் மாநிலத்தின் முதல் நகர எரிவாயு விநியோகிப்பு பிணையத்தினை (City Gas Distribution network) துவக்கி வைத்துள்ளார்.
- இது இந்தியாவின் எட்டாவது நகர எரிவாயு விநியோகிப்பு அமைப்பாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ஸ்ரீ ஜெய தேவ் ராஸ்டிரிய யுவ பிரதிப புரஸ்கார் விருது

- அமெரிக்காவைச் சேர்ந்த கதக் நடனக் கலைஞரான (Kathak dancer) அனிந்திதா அன்னமிற்கு (Anindita Anaam) கதக் நடனத் துறைக்கு அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பிற்காக 2018 ஆம் ஆண்டின் ஸ்ரீ ஜெய தேவ் ராஸ்டிரிய யுவ பிரதிப புரஸ்கார் விருது (Shri Jayadev Rastriya Yuva Pratibha Puraskar 2018) வழங்கப்பட்டுள்ளது.




- ஒடிஸா மாநிலம் புவனேஸ்வரில் நடைபெற்ற ஜெய தேவ சர்வதேச நடனத் திருவிழாவின் (Jayadev International Dance Festival) போது ஸ்ரீ ஜெயதேவ் ராஸ்டிரிய யுவ

பிரதிப புரஸ்கார் விருது அனின்திதா அன்னமிற்கு வழங்கப்பட்டது.

- ஒடிஸா மாநில அரசின் கலாச்சாரத் துறையால் தேசிய கலாச்சாரத் திட்டத்தின் (National Culture Mission) கீழ் இந்த நான்கு நாள் திருவிழா புவனேஸ்வரில் நடைபெற்றது.

## பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விருதுகள் - 2016 & 2017

- தேசிய தொழிற் நுட்ப தினத்தை நினைவு கூர்வதற்காகவும், பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினுடைய (Defence Research and Development Organisation-DRDO) பல்வேறு ஆராய்ச்சியாளர்களின் மாபெரும் பங்களிப்பினை கவுரவிப்பதற்காகவும் DRDO-வின் பல்வேறு ஆராய்ச்சியாளர்களுக்கு மத்திய இராணுவப் பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விருதுகளை வழங்கியுள்ளார்.
- பாதுகாப்புத் துறை அமைச்சரின் அறிவியல் ஆலோசகர் (Scientific Advisor to Raksha Mantri), பாதுகாப்புத் துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் முன்னாள் செயலாளர் மற்றும் DRDO-வின் பொது இயக்குநரான டாக்டர் வி.கே. சரஸ்வத்திற்கு (Dr V K Saraswat) 2017 ஆம் ஆண்டின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது (DRDO Lifetime Achievement Award – 2017) வழங்கப்பட்டுள்ளது.
- பாதுகாப்புத் துறை அமைச்சரின் அறிவியல் ஆலோசகர் (Scientific Advisor to Raksha Mantri), பாதுகாப்புத் துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் முன்னாள் செயலாளர் மற்றும் DRDO-வின் பொது இயக்குநரான டாக்டர்.வாசு தேவ் கல்குன்டே ஆத்ரே (Dr Vasudev Kalkunte Aatre) அவர்களுக்கு 2016-ஆம் ஆண்டின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.



- 2016-ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தொழில்நுட்ப தலைமைத்துவ விருது (DRDO Technology Leadership Award – 2016) ஏவுகணை மற்றும் பாதுகாப்பு முக்கியத்துவ அமைப்புப் பிரிவின் பொது இயக்குனர்

(Director General of Missiles & Strategic Systems) மற்றும் புகழ்மிக்க ஆராய்ச்சியாளரான, பாதுகாப்புத் துறை அமைச்சரின் அறிவியல் ஆலோசகரான டாக்டர்.G.சதீஸ் ரெட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது.

## பாலகுமாரன் - மறைவு

- புகழ்பெற்ற தமிழ் நாவலாசிரியரான பாலகுமாரன் உடல்நலக் குறைவின் காரணமாக இயற்கை எய்தியுள்ளார்.



- மெர்குரிப் பூக்கள் (Mercury Pookal), இரும்பு குதிரைகள் (Irumbu Kuthiraigal) போன்ற தன்னுடைய நாவல்கள் மூலமாக பிரபலமான பாலகுமாரன் அந்நாவல்களினால் முறையே இலக்கியச் சிந்தனை விருது (Ilakkiya Chinthanai Award) மற்றும் ராஜா சர் அண்ணாமலை விருது (Rajah Sir Annamalai Chettiar Award) ஆகியவற்றினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.
- பாலகுமாரன் தமிழக அரசின் கலைமாமணி விருது (Kalaimamani Award) உட்பட பல்வேறு விருதுகளினைப் பெற்றுள்ளார்.

- - - - - - - - - - - - - - -